**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 343/2016.**

**வழக்கு சாட்சி – அ.சா. 9**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ராஜசேகர் | ஜாதி | |
| தந்தை பெயர் | திரு. கருப்பையா | தொழில் | காவல் ஆய்வாளர், கோவை போத்தலூர் காவல் நிலையம் |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 47/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2026.

**( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, கோவை போத்தலூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 22.05.2016 ல் தேனி நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது தேனி பாரஸ்ட்ரோடு 3 வது தெருவை சார்ந்த முத்து மகன் பழனிவேல் என்பவர் காவல் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குறறஎண். 497/2016 சட்டப்பிரிவு 279, 337, 304(A) இதசவின்படி வழக்கு பதிவு செய்தேன், புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதன் நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அசாஆ.2 ஆகும்**. ஆய்வாளர் என்னை இது சம்மந்தமாக விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

புகாரானது காவல் நிலையத்தில் ஆஜராகி எழுதி கொடுக்கப்பட்டது. புகாரில் என்ன தேதியில் புகார் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் 22.05.2016 ஆகும். அதே 22.05.2016 தேதியில் தான் புகார் வாங்கியுள்ளேன். முதல் தகவல் அறிக்கை பத்தி 14 ல் புகார்தாரரின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பத்தி 15 ல் தேதி, நேரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தேதி குறிப்பிட்டுள்ளேன் நேரம் குறிப்பிடபடவில்லை.

நான் சொன்ன நேரம், சொன்ன இடத்தில் சொல்லியுள்ளவாறு புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.06.17 19:52:38 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**